பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 15 வியாழக்கிழமை 27.02.2025 கதிர் 111

# அரசியல் தலைவர்களின் அணுகுமுறை மாறாது புதிய அரசமைப்பு சாத்தியமற்றது

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



எந்தவொருஅரசமைப்புமறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல்அணுகுமுறையிலும்மாற்றம்ஏற்பட வேண்டும். இல்லையேல் புதிய அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு ஜானகி ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் ☞2

# இது ரகசியம் அல்ல!

வடமராட்சியில் செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களிடம் பேசிய தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவது குறித்துத் தமது கட்சித் தலைவர்கள் பங்காளிக் கட்சி களின் தலைவர்களுடன் பேச்சு நடத்துகின்றார்கள் என்று தெரிவித் திருந்தார். ஆனால், எனக் ☞2

# இருவர் கைது

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'கெஹெல்பத்தர பத்மே'என்று அழைக்கப்படும்மன்தினுபத்மசிறிபெரேரா ஹேவத்என்பவரின்மனைவியின்வீட்டை காணொளிஎடுத்ததாக கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள் பன்னல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் களிடமிருந்து, மோட்டார் சைக்கிள், வீட்டை காணொளி எடுத்த கையடக்கத் தொலைபேசி மற்றும் 4,610 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 'கணேமுல்ல சஞ்சீவ' என்பவர் கொழும்பு புதுக்கோட்டை நீதிமன்றத்துக்குள் வைத்து கடந்த 19 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கும் 'கெஹெல்பத்தர பத்மே' என்பவருக்கும் தொடர்பிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

'கெஹெல்பத்தர பத்மே' என்பவரின் மனைவியின் பெற்றோரை கொலை செய்யும் நோக்கத்தில் சந்தேகநபர்கள் இருவரும் குறித்த வீட்டை காணொளி எடுத்துள்ளனர் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### தேசிய மக்கள் சக்தியின் வரவு- செலவுத் திட்டம்

# சாதாரண மக்கள் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ததால் ஆதரித்தேன்

## செல்வம் அடைக்கலநாதன் விளக்கம்



ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் வரவு,செலவுத்திட்டம்சதாரண மக்களின்எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் முன்மொழிவுகளைக் கொண்டிருந்தமையால் அதனை ஆதரிக்கும் தீர்மானத்தினை எடுத்த தாக, ரெலோவின் ☞2

# உள்ளாட்சி தேர்தல் குறித்து ஆராய இன்று கூடுகின்றது ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் திகதி மற்றும் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் தீர்மானம் எடுப்பதற்கு தேர் தல்கள் ஆணைக்குழு நாளை வியாழக்கிழமை கூடுகிறது. இறுதி தீர்மானம் நாளை அல்லது எதிர்வரும் வாரம் அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜூலை மாதத்திற்கு முன்னர் தேர்தலை நடத்து வதற்கு தேர்தல்கள் ஆணைக் குழு அவதானம் செலுத்தியுள் ளதாகவும், மே மாதம் முதல் வாரமளவில் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதற்கு அதிகம் சாத்தியம் காணப்படு வதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் அச்சுதன் சிவபாலசுப்ரமணியம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வெகுவிரைவாக நடத்துமாறு உயர்நீதிமன்றம் விடுத்துள்ள உத்தரவினை கௌரவமான முறையில் ஏற்றுக்கொண்டு ☞8

# மீண்டும் துப்பாக்கிச் சூடு

பாதாள உலகக் குழுத் தலைவரான கணேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்திற்கு உள்ளே வைத்துக் கொலை செய்யப்பட்டமை, தந்தை, மகன், மகள் என மூவர் சுட்டுக்கொல்லப்பட்டமை என்று பரபரப்பான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்ற நிலையில், தெற்கில் மீண்டும் ஒரு துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது. இதில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மினுவங்கொடை,பட்டதுவனபகுதியில் உள்ள முச்சக்கர வண்டி நிறுத்துமிடம் அருகே நேற்று அடையாளம் தெரியாத நபர் ஒருவர் முச்சக்கர வண்டி சாரதி மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று மினுவங்கொடை பொலிஸார் ☞2

# ஆளும்தரப்பிற்கு அனுபவம் இல்லை மக்கள் அதை இன்று காண்கின்றனர்

## முன்னாள் எம்.பி. தொலவத்த தெரிவிப்பு



தேசிய மக்கள் சக்தியினருக்கு அனுபவம் இல்லை என நாம் தேர்தலுக்குமுன்னரேகூறினோம். தற்போது மக்கள் அதனை நடைமுறையில் காண்கின்றனர். தேசியபாதுகாப்பைஉறுதிப்படுத்தி முறையாக ஆட்சி செய்ய முடியாவிட்டால் மீண்டும் நாட்டை ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைத்துச் செல்லுங்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்பிரேம்நாத்தொலவத்த தெரிவித்தார். ☞2

# பிஎச்ஐமார் கிழக்கில் இன்று சுகயீன 'லீவு' போராட்டம்

கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து பொது சுகாதாரப் பரிசோதகர்கள் (பி.எச்.ஐ) இன்று சுகயீன விடுமுறையில் செல்வார்கள் என்றும், அவர்கள் கடமைக்கு வரமாட்டார்கள் என்றும் இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள் நீண்ட காலமாக எதிர் கொண்டு வரும் பிரச்சினைகளுக்குத்தீர்வுகாண ஜனவரி 10 கிழக்கு மாகாண பிரதம செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையா டலில் எட்டப்பட்ட ஒப்பந்தங் கள் மீறப்பட்டதால் இந்தப் போராட்டம்அறிவிக்கப்பட்டுள் ளதாகச் சங்கத்தின் தலைவர் உப்புல் ரோஹண மற்றும் அதன் செயலாளர் முத்துக் குடா ஆகியோர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# கத்திக்குத்தில் ஒருவர் கிராண்டபாஸில் சாவு

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் நேற்று இடம்பெற்ற கத்திக்குத்துத் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மேலும்இருவர்படுகாயமடைந்தநிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மீது குத்தப்படுகிறது தீவிரவாதி என்ற முத்திரை

## ஐ.நா. விசேட அறிக்கையாளர் சுட்டிக்காட்டு

இலங்கையில் மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் மீது தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுகின்றது என்று மனித உரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடர் திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரின் இரண்டாம் நாள் அமர்வில் செவ்வாய்கிழமை இலங்கை சார்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், சகலதரப்பினரதும்நம்பிக்கையை ☞8

# ரணில் இன்று இந்தியா பயணம்

உலகலாவிய விசேட முன்னேற்றங்கள் குறித்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இந்தியா செல்லவுள்ளார். முக்கிய இராஜதந்திரிகளின் பங்கேற்புடன் நாளை வெள்ளிக்கிழமை புதுடில்லியில் இந்தக் கலந்துரையாடல் ஆரம்பமாகவுள்ளது.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி பிரதம விருந்தினராக பங்கேற்கவுள்ள இந்த கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன், கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீவன் ஹாபர், அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் டோனி எபொட் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன் போது தென்னாசியா தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறப்புரையாற்றவுள்ளார். அத்தோடு இந்தப் பயணத்தின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட சந்திப்பிலும் கலந்து கொள்ளவுள்ளார்.அத்தோடு ☞8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கென்னவோ அந்தப் பேச்சுக்கள் எல்லாம் காலாவதியாகிப் போய்விட்டன என்றேபடுகின்றது. இனிமேல் பேசுவதற்கோ ஒற்றுமைக்கோசம்பாடுவதற்கோ இடமில்லை என்றே தோன்றுகின்றது.

சுமந்திரன் பங்காளிக் கட்சிகள் என்று குறிப்பிட்டது, முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய ரெலோவையும் ஈபிஆர்எல்எவ்வையும் புளொட்டையுமே என்று எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில் அந்தக் கட்சிகளுடன்தான் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் பேசிவந்தார்.

கட்சித் தலைவராகப் பொறுப்பெடுத்தது முதல் சிவஞானம் கட்சியை நேர்சீர்ப்படுத்த முயற்சிக்கிறார் என்பது மட்டுமன்றி, கூட்டமைப்பின் தொடக்க கால அரசியல் எழுச்சியை மீண்டும் ஏற்படுத்துவதற்கும் முயற்சிக்கிறார். அதன் மூலம் தமிழ்த் தேசிய அரசியலுக்குப் புத்துயிர் வழங்க முடியுமா என்று பார்க்கிறார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் அரசுக் கட்சியே உடைத்தது என்று மேற்கொள்ளப்பட்ட விசமத்தனமான பரப்புரை மக்களிடம் கணிசமான அளவுக்கு எடுக்கப்பட்டுள்ளது என்று நம்புகின்ற அவர், அதனால் தேர்தல்களில் ஏற்பட்ட பின்னடைவுகளைத் தனது பதவிக் காலத்தில் சரிசெய்வதற்கு முயற்சித்தார். அந்த அடிப்படையில் தனது கட்சிக்குள் இருக்கும் இ-ரு அணியினருடனும் (சிறீதரன் பிரிவு, சுமந்திரன் பிரிவு) பேசி அவர்களின் சம்மதத்தையும் பெற்றே நேர்மையாக இந்த முயற்சியில் இறங்கினார். ஆனால் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், இந்த வயதான காலத்திலும் அவரைக் குனிய வைத்து ஆழமாக முதுகில் குத்திவிட்டார்கள்.

உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்கொள்வதில் சிவஞானத்திடம் இரண்டு திட்டங்கள் இருந்தன. அதில் முதலாவது பங்காளிக் கட்சிகள் விரும்பினால், அவர்களின் வேட்பாளர்களை தமிழ் அரசுக் கட்சியின் பட்டியலிலேயே சேர்த்துக்கொள்வது. உள்ளூராட்சிதேர்தலுக்குமுதலில்வேட்புமனுக் கோரியபோது கொடுக்கப்பட்ட பட்டியலில் எல்லாச்சபைகளிலும்பலர் இப்போது இல்லை. ஒன்றில் வேறு கட்சிக்குத் தாவி விட்டார்கள் அல்லது வெளிநாடு சென்றுவிட்டார்கள் அல்லது இறந்துபோனார்கள் என்று பல காரணங்களால் எல்லாச் சபைகளுக்குமான தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியல்களிலும் வெற்றிடங்கள் இருக்கின்றன. எனவே பங்காளிக் கட்சிகளின் வேட்பாளர்களை இந்த இடங்களில் நிரப்ப முடியும் என்று அவர் நம்பினார். இதன் மூலம் அவர்களையும் இணைத்துக்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலை எதிர்கொள்ளலாம் என்பது அவரது ஒரு திட்டம்.

அதற்கு பங்காளிக்கட்சிகள் விரும்பாவிட்டால் தனித் தனியே போட்டியிடுவது, ஆனால் இரு தரப்பினரும் ஒத்துழைப்பாகவே போட்டியிடுவதாக மக்களிடம் முன்கூட்டியே அறிவித்துவிட்டு, தேர்தலின் பின்னர் ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்பது என்பது அவரது இரண்டாவது திட்டம். சபைகளை எப்படிப் பகிர்ந்துகொள்வது, தொகுதிகளைப் பங்கிட்டுக்கொள்வது ஆகிய விடயங்களை தேர்தலுக்கு முன்னரே பேசித்தீர்த்துக்கொள்வது என்பது அவரது இந்தத் திட்டத்திற்குள் உள்ளடக்கம்.

இதுவிடயம் தொடர்பாக அவர் ஈபிஆர்எல்எவ் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத் தலைவர் ஐங்கரநேசன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் இதே வரிசையில் ஒருவர் பின் ஒருவராகப் பேசினார். இதில் ஐங்கரநேசனை நல்லூர் பிரதேச சபையின் தலைவராகப் போட்டியிட வைப்பது அவரது நோக்கமாக இருந்தது. ஆனால், ஐங்கரநேசன் அந்த யோசனையை நிராகரித்துவிட்டார். மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் நோக்கம் தனக்கு இருப்பதனால் இந்தத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் தனக்கு இல்லை என்றும், ஆனால் தான் கைகாட்டும் நபருக்கு சபைத் தலைவர் பதவியை வழங்கத் தமிழ் அரசுக் கட்சி சம்மதித்தால் அவர்களுடன் இணைந்துகொள்ளத் தான் தயாராக இருக்கின்றார் என்றும் தெரிவித்திருக்கின்றார். சிவஞானமோ ஐங்கரநேசனை நல்லூரில் போட்டியிட வைக்கும் யோசனையோடு சென்றவர், அது இல்லையென்றாகியதும் மற்றைய விவரங்கள் குறித்து அவர் அதிகம் அக்கறைகொள்ளவில்லை என்று தெரிகின்றது.

மற்றைய தலைவர்களான சுரேஸ் மற்றும் சித்தார்த்தன் ஆகியோர் சிவஞானத்தின் யோசனைகளை ஆதரித்தனர். அவரோடு இணங்கிப் போகிறவர்கள் போன்றே பேசினர். திட்டத்தை வரவேற்றனர். தொடர்ந்து பேசலாம் என்றனர். ரெலோவுடனும் பேசும்படி கூறினர். செல்வத்தையும் சந்தித்துத் தான் பேசுவார் என்றும் அதற்காக மன்னாருக்குச் செல்லவுள்ளார் என்றும் அவர்களுக்கு சிவஞானம் தெரிவித்தார். அதுபோன்று கடந்த மன்னார் சென்று அவர் செல்வத்தையும் சந்தித்தார். அவரும் இந்தத் திட்டத்தை ஆதரித்தார்.

இந்தப் பேச்சுக்களின் இடையே சுரேஸ் பிரேமச்சந்திரனோ சித்தார்த்தனோ ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியும் மற்றைய கட்சிகளும் உள்ளூராட்சித் தேர்தல் குறித்துப் பேசப்போகின்றோம் என்கிற விவரத்தை வெளியிடவே இல்லை. அந்தப் பேச்சுக்களின் பின்னர் தமிழ் அரசுக் கட்சியின் யோசனைகள் குறித்த ஆராயலாம் என்றுகூட அவர்கள் மூச்சும்விடவில்லை. போதாக்குறைக்கு அவர்களோடு சேர்ந்து பயணிப்பது என்கிற முயற்சியை சிவஞானம் முன்னெடுத்த பின்னரும் அந்தக் கூட்டத்திற்கு தமிழ் அரசுக் கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்தக் கூட்டத்திற்கான அழைப்பை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரான புளொட்டைச் சேர்ந்த குருதான் அனைத்துக் கட்சியினருக்கும் விடுத்திருந்தார். ஆனால் அவரிடமிருந்து எந்தவித அழைப்பும் சிவஞானத்திற்கோ தமிழ் அரசுக் கட்சியினருக்கோ விடுக்கப்படவில்லை. அந்தக் கூட்டத்திற்குப் பின்னர், 9 கட்சிகள் இணைந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடப்போவதாக அறிவிக்கப்பட்டது. (அதில் உண்மையில்லை என்பது வேறுவிடயம்)

இருப்பினும் ஈபிஆர்எல்எவ், புளொட் மற்றும் ரெலோ ஆகியன செய்த இந்தத் துரோகம் தமிழ் அரசின் தலைவரை மிக ஆழமாகப் பாதித்துள்ளது என்று அறியமுடிகின்றது. இவர்களுடன் மீண்டும் தான் எடுத்த முயற்சி, பைத்தியக்காரத்தனமாது என்று தனது கட்சிக்குள்ளேயே தன்னை எள்ளி நகையாட வைத்துவிட்டார்களே என்ற மனவருத்தம் அவருக்கு.

நாடாளுமன்றத் தேர்தலில் ஜேவிபி வெற்றி பெற்ற நிலையில், தமிழ்த் தேசியத்தை இந்தக் கட்சிகளை இணைப்பதன் மூலம் மீட்டெடுக்க முடியும் என்ற அவரது நம்பிக்கையின் மீது பங்களாகிக் கட்சிகளின் தலைவர்கள் செய்த துரோகம் மீள இட்டுநிரப்ப முடியாத பிளவை ஏற்படுத்தியுள்ளதாகவே தெரிகிறது. இது பச்சைத்து-ரோகம் என்பதும், இனிமேல் தமிழ் அரசு கூட்டமைப்பிலிருந்து வெளியேறியது என்று யாரும் குற்றஞ்சாட்ட முடியாது என்பதும் சிவஞானத்தின் அசைக்க முடியாத தீர்மானமாக இருக்கின்றது.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஒற்றுமை, மீள் இணைவு என்ற கதைகளுக்கு இனி இடமேயில்லை என்றே தோன்றுகின்றது. தமிழ் அரசுக்கட்சிக்குள் இதுவரையில் மற்றைய கட்சிகளுக்குச் சாதமாக இருந்தமென்மோக்குத் தலைவரான சிவஞானத்தின் விக்கெட்டையும் பங்காளிக் கட்சித் தலைவர்கள் வீழ்த்திவிட்டார். தமது கூட்டுக்குள் முன்னாள் ஈபிடிபி நபரான சந்திரகுமாரைச் சேர்த்துக்கொண்டதன் மூலம் தமக்கு ஆதரவான சிறீதரனின் விக்கெட்டையும் உடைத்துஎறிந்துவிட்டார்கள். ஆகமொத்தத்தில் இனி ஒருபோதும் இணைவு சாத்தியப்படும் சாத்தியமில்லை என்பதே சிறப்பு.

இனிமேல் தேர்தல்கூட்டுக்கு மட்டுமே வாய்புகள் உண்டு. ஒற்றுமை, கூட்டமைப்பு எல்லாம் காலாவதியான கனவுகள் மட்டுமே.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றினார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

அரசியல்கட்சிகள்பொறுப்பற்றவையாகவும், தேசிய நலன்கள் தொடர்பில் சிந்திக்காதவை யாகவும், அடுத்த தேர்தலில் என்ன செய்யலாம்? வெல்வோமா, தோற்போமா எனச் சிந்திப்பவையாகவும் இருக்கும் தற்போதைய சூழ்நிலையில் நாம் இதனை எவ்வாறு செய்யப்போகிறோம்? முன்னைய ஆளும்தரப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சிறந்த செயற்திட்டமொன்று இடைநிறுத்தப்பட்டாலும் அவர்கள் வருந்தப்போவதில்லை.

இலங்கையைப் பொறுத்தமட்டில் முதலாவதாக அரசியல் நெறிமுறைகள் மாற்றமடைய வேண்டும். 'அரகலய' அதில் மாற்றத்தை ஏற்படுத்தியது. 'அரகலய'வின் ஊடாக வெளிப்படுத்தப்பட்ட மிக வலுவான செய்தியை இன்னமும் பாரம்பரிய அரசியல் கட்சிகள் சரிவரப் புரிந்துகொள்ளவில்லை என்றே தெரிகிறது. அவர்களுக்கு அது புரியாது.

நாம் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு முன்னெடுத்த முயற்சிகள் யாவும் நாடாளுமன்றத்துக்குள்ளிருந்து தூக்கியெறியப்பட்டன. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பல அரசமைப்பு வரைபுகள் நிலுவையில் உள்ளன. அவற்றை ஒன்றிணைத்து, தற்கால சூழ்நிலைக்கு பொருத்தமானதொரு வரைபை தயாரிப்பது இலகுவானதாக இருக்கும். எந்தவொரு அரசமைப்பு மறுசீரமைப்பையும் மேற்கொள்வதற்கு முன்னதாக நாட்டின் அரசியல் சூழ்நிலையிலும் தலைவர்களின் அரசியல் அணுகுமுறையிலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அன்றேல் அதனை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாது.

நாம் நாடாளுமன்றத்தின் தன்மையை முழுமையாக மாற்றியமைக்கவேண்டும். இப்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிப்போரில் பெரும்பான்மையானோர் அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை நிராகரித்துள்ளனர். இல்லாவிடின் அவர்களது கட்சி அதனை நிராகரித்துள்ளது. அவ்வாறிருக்கையில் தற்போது மாத்திரம் அவர்களால் இதனை எவ்வாறு செய்யமுடியும் என எனக்குத் தெரியவில்லை என்றார்.

## சாதாரண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் விளக்கம் அளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் கன்னி வரவு, செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு செவ்வாய்கிழமை நடைபெற்றிருந்த நிலையில் அதனை ஆதரித்து வாக்களித்தமை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் மாற்றத்தினை ஏற்படுத்துவோம் என்ற கோசத்துடன் மக்களின் ஆணையைக் கோரிய ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலானதேசியமக்கள்சக்தியினருக்கு அதற்கான ஆணை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் ஆட்சியில் முதலாவது வரவு, செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் அவர்கள் வடக்கு, மாகாணத்துக்கு அதிகமான ஒதுக்கீடுகளைச் செய்துள்ளார்.

அதனைவிடவும், சதாரண மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் வகையில் வரவு, செலவுத்திட்டத்தின் முன்மொழிவுகள் அமைந்திருக்கின்றன என்பதை கட்சி அரசியலுக்கு அப்பால் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அந்த வகையில், அவர்களின் முன்மொழிவுகள் உரிய வகையில் செயற்படுத்தப்பட்டு நடைமுறைச்சாத்தியமாக வேண்டும் என்பது எனது வலியுறுத்தலாக இருக்கின்றது. கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ஆளும்தரப்புகள் முன்மொழிவுகளைக் கவர்ச்சிகரமாக முன்வைத்தாலும் அவற்றை செயற்படுத்துவதில்லை. ஆகவேதான் தேசிய மக்கள் சக்தி மாற்றத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி அளித்து ஆட்சியில் அமர்ந்திருக்கின்றது. அந்த மாற்றத்தினையே நாமும் எதிர்பார்க்கின்றோம். சாதாரண பொதுமக்களுக்காக ஆளும்தரப்புச் செயற்படவேண்டும் என்பதுதான் எமது எதிர்பார்ப்பாகும்.

பொருளாதாரரீதியாக வரவு, செலவுத்திட்டம் முன்னேற்றகரமாக இருந்தாலும் அவற்றை செயற்படுவதில் ஆளும்தரப்பு அதீதமான முனைப்பினைக்காண்பிக்கவேண்டியுள்ளது. அதேநேரம், ஆளும்தரப்பானது, தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற நீண்டகால பிரச்சினைகளுக்கும் தீர்வினைக் காண்பிக்க வேண்டியது அவசியமாகின்றது. என்னைப் பொறுத்தவரையில், மாற்றத்தை நோக்கி ஆளும்தரப்புச் செல்வதற்கு ஆதரவினை வழங்குவதற்குத் தயாராகவே உள்ளேன். ஆனால் ஆளும்தரப்பு இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயங்களையும் தாமதமன்றி முன்னெடுக்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, பொறுப்புக்கூறல் விடயங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்காகப் படைகள் உட்பட தொல்பொருள் திணைக்களம் உள்ளிட்டவற்றுக்கு துணைபோதல் ஆகியவற்றுக்கும் தாமதமன்றி தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது. அவ்வாறு ஆளும்தரப்புச் செயற்படாதுவிட்டால் என்னால் தற்போது காண்பிக்கப்பட்டுள்ள நல்லெண்ண சமிக்ஞையை விலக்கிக் கொள்ளவே நேரிடும் என்றார்.

## மீண்டும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் மினுவங்கொட, பட்டதுவான, கொட்டகம முதியன்செலாகே பகுதியைச் சேர்ந்த லஹிரு ரந்தீர் காஞ்சன என்ற 38 வயதுடைய முச்சக்கர வண்டி ஓட்டுநர் ஆவார்.

சுட்டுக் கொல்லப்பட்ட நபர், இத்தாலியைச் சேர்ந்த பாதாள உலகக் குழுத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவவின் கொலையைத் திட்டமிட்ட கெஹெல் பத்தர பத்மே எனப்படும் மண்டினு பத்மசிறி பெரேராவின் பள்ளி நண்பர் என்று காவல்துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்த நபர் மற்ற முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்தபோது, மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் சிறிய துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## ஆளும்தரப்பிற்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

நாமல் ராஜபக்ச மாத்திரமின்றி சகல எதிர்க்கட்சிநாடாளுமன்றஉறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல் காணப்படுகிறது. அவர்களுக்கு தமது நிலைப்பாட்டுக்கமைய சுதந்திரமாகச் செயற்படுவதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. ஆளுந்தரப்பு எவ்வாறான சதிச்செயல்களில் ஈடுபட்டாலும் நீதித்துறையின் மீது எமக்கு நம்பிக்கை இருக்கிறது.

எதிர்க்கட்சிகளை முற்றாக இல்லாதொழித்து கம்யூனிச ஆட்சியை தோற்றுவிப்பதே இவர்களது நோக்கமாகும். கைது செய்யப்படும் சந்தேகநபர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி உயிரிழக்கின்றனர்.

இவை தொடர்பில் மக்கள் தெளிவு பெற வேண்டும். இவ்வாறு சந்தேகநபர்கள் உயிரிழப்பது சிறந்தது என சிலர் எண்ணுகின்றனர். ஆனால் அது தவறாகும். நாட்டில் சாவுத் தண்டனைகூட நிறைவேற்றப்படுவதில்லை. சிறைக் கைதிகளின் உரிமைகள் அரசமைப்பிலும் உள்வாங்கப்பட்டுள்ளன. அவ்வாறிருக்கையில் அவர்களைக் கொல்வதற்கு யாருக்கு என்ன உரிமையிருக்கிறது? சட்டமா அதிபர் திணைக்களம் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்ற நிலையிலும், அதற்கு இணையாக பிரிதொரு சட்ட நிறுவனத்தை நிறுவுவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய பாதுகாப்பு குறித்து எமக்கு கற்றுக் கொடுப்பதாகக் கூறியவர்களுக்கே தேசிய பாதுகாப்பு என்ன என்ற புரிதல் இல்லை. அதனால்தான் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தேசிய பாதுகாப்புக்கு பாதிப்பில்லை என்று கூறுகின்றனர். இந்த அழுத்தத்தை பொறுத்துக் கொள்ள முடியாமல்தான் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அவரது சாரதியை கழுதை எனத் திட்டினார்.

இவர்களுக்கு அனுபவம் இல்லை என்பதை நாம் தேர்தலுக்கு முன்னரே குறிப்பிட்டிருந்தோம். அதனை தற்போது மக்கள் நடைமுறையில் காண்கின்றனர். நாட்டை ஆட்சி செய்ய முடியாவிட்டால் மீண்டும் ரணிலிடம் ஒப்படைத்து விட்டுச் செல்லுங்கள் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# இஸ்லாமிய நூல்களின் மீது தீவிர சுங்கப் பரிசோதனை

## மு.கா.தலைவர் ஹக்கீம் குற்றச்சாட்டு

நாட்டுக்குள் கொண்டுவரப்படும் தரமான இஸ்லாமிய நூல்கள் மீதும் தீவிரமான சுங்கப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டார்.

இலங்கை வானொலி ,முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் கலா பூஷணம் எம்.இஸட்.அஹ்மத் முனவ்வர் எழுதிய 'ஆயிரமாவது குத்பா அஞ்சலும் -வரலாறும்' நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு-7, புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற போது, அதில் அதிதிச் சொற்பொழிவு ஆற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார் .

அங்கு உரையாற்றும் போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது -

ஒரு காலத்தில், முன்னர் இப்னு நபாதா என்பவர் அரபுத் தமிழில் எழுதிய குத்பா பிரசங்கங்களே நாட்டில் அநேக பள்ளிவாசல்களில் நிகழ்த்தப்பட்டு வந்தன.பின்னர் உள்நாட்டு அரபு கலாசாலைகளிலும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் கற்றுத் தேறிய தரமான உலமாக்களால் சிறப்பான முறையில் ஜும்ஆ குத்பாக்கள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன .

இன்று இந்த 1000 ஆவது குத்பா வானொலி அஞ்சல் பற்றிய நூலை ஓர் அடையாளமாக வெளியிட்டு வைக்கின்ற பணியை செய்வதன் மூலம், அதை ஓர் ஆவணமாக விட்டுச் செல்வதற்கும், தொடர்ந்தும் இந்தப் பணி நிகழ வேண்டும் என்பதற்குமான ஒரு முயற்சியைத்தான் அஹ்மத் முனவ்வர் செய்திருக்கின்றார்.

சமூகம் என்ற வகையில் நாங்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களில் ஒன்றுதான் எங்களுக்கு இடையில் இருக்கின்ற ஆன்மீக ரீதியான சில வேறுபாடுகளை மிகைப்படுத்துகின்ற நிலைவரம் சில இடங்களில் காணப்படுவதாகும். அதை எப்படி குறைத்துக் கொள்ளலாம் என்பதற்காக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா போன்ற அமைப்புக்கள் மிக சிறப்பாகச் செயல்பட்டு ,எங்களுக்கிடையில் இருக்கின்ற ஆன்மீக ரீதியான சில கருத்து வேறுபாடுகளின் மத்தியில் ஒற்றுமையைக் காண்பது எப்படி என்பது பற்றிய முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. மாறி வருகின்ற உலகில் ,நிறைய புதுமைகள் நிகழ்கின்ற ஒரு யுகத்தில் குத்பா பிரசங்கங்களை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தி ,நமது மக்களை நல்வழிப்படுத்துகின்ற முயற்சிகள் பல இடங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த முயற்சிகளுக்கு மத்தியில் கவலைக்குரிய விடயம் என்ன வென்றால், நாம் எல்லோரும் எதிர்நோக்கிய துர்பாக்கிய சம்பவமான உயர்த்த ஞாயிறு தாக்குதலாகும்.

அது நடந்த பிறகு , குறிப்பாகச் சொல்லப் போனால், சென்ற நூற்றாண்டினதும் , இந்த நூற்றாண்டினதும் மிகப்பெரிய இஸ்லாமிய ஆளுமைகளான, இரண்டு வருடங்களுக்கு முன்பு கத்தார் நாட்டில் தன்னுடைய 96ஆவது வயதில் உயிர் நீத்த கலாநிதி யூசுப் கர்ழாவி மற்றும் தலைசிறந்த சன்மார்க்க அறிஞர்களான ஷஹீத் செய்யத் குதுப், மௌலானா செய்யத் அபுல் அஃலா மௌதூதி போன்றோரின் பெயர்கள் எல்லாம் இந்த நாட்டில் துரதிர்ஷ்டவசமாக தவிர்க்கப்படும் பெயர்களாக இருக்கின்ற ஒரு நிலைமை உருவாகியிருக்கின்றது.அல்லாமா யூசுப் கர்ழாவியை பொறுத்த மட்டில் அவருடைய முயற்சிகளில் குறிப்பாக இஸ்லாமிய சிந்தனையை நவீன உலகுக்கு உகந்த வகையில் வடிவமைத்த அவருடைய பணி அளப்பரியது. அதிலும் குறிப்பாக, பிக்ஹுல் ஜிஹாத் - ஜிஹாத் பற்றிய சிந்தனை என்ன, ஜிஹாத்தின் பல முகங்கள், அது தவறாக பயன்படுத்தப்படுகின்ற விவகாரம் பற்றியும், பிக்ஹுல் அக்கல்யாத் என்ற புதிய துறையை பற்றி,அதாவது முஸ்லிம்கள் சிறுபான்மை சமூகமாக வாழ்கின்ற நாடுகளில் எப்படி தங்களுடைய வாழ்வின் நெறிமுறைகளை அடுத்த சமூகங்களோடு சகவாழ்வுக்காக வடிவமைத்து கொள்வதில் புதிய சிந்தனைகளைப் புகுத்துவது பற்றியும் மிகப்பெரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றார்.

இவர்களைப் பற்றித் தவறான விதத்தில் பொருள் கோடல் செய்வதற்கு அப்பால், இன்று இந்த நாட்டுக்குள் வருகின்ற தரமான இஸ்லாமிய நூல்களையும் சுங்கத்




திணைகளத்தில் தீவிர பரிசோதனைக்குட்படுத்துகின்ற பெரிய அவஸ்த்தைக்குள் நாங்கள் வாழ்கின்றோம். அலிசப்ரி அமைச்சராக இருந்த காலம் தொட்டு இது சம்பந்தமான முயற்சிகளை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம். இன்றைய ஆட்சியாளர்கள் மத்தியிலும் இந்த பாதுகாப்பு அமைச்சருக்கும் இதனைக் கொண்டு சென்றிருக்கின்றோம். இது சமூகங்களுக்கு மத்தியில் தேவையில்லாத விபரீதத்தையும் ,தவறான எண்ணத்தையும் ஏற்படுத்திவிடக் கூடாது என்பதில் மிக கவனமாக இருக்கின்றோம்.

இந்த நாட்டில் மூன்று சமூகங்களுக்கு மத்தியிலும் அரசியலுக்காக வன்முறையை பாவித்தவர்கள் இருந்திருக்கின்றார்கள். இன்று ஆட்சியில் இருக்கின்ற கட்சியினரும் ஆரம்ப காலத்தில் வன்முறையோடு ஆட்சியை கைப்பற்றலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.அவர்களுடைய தலைவர் ரோஹன விஜயவீரவின் நினைவாக அந்த கட்சியினர் 'மஹவிரு தின' என்பதை ஒவ்வொரு வருடமும் கொண்டாடுகின்றார்கள். இந்த நாட்டில் சர்ச்சைகள் இருந்தபோதிலும், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நினைவாக தமிழ் மக்கள் தரப்பில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 26ஆம் திகதி 'மாவீரர் தினம்' அனுஷ்டிக்கின்ற ஒரு வழமை இருப்பது எல்லோருக்கும் தெரியும்.ஆனால் 'இஸ்லாத்தின் பெயரால்' நடந்த பயங்கரவாதத்தில் மரணித்தவர்களின் ஜனாஸாக்களை கூட முஸ்லிம் சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதை இந்த ஆட்சியாளர்களும் பெரும்பான்மை சமூகத்தினரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் அவர்களுக்காக ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்து கின்ற விடயத்தைக் கூட செய்யவில்லை. இந்த நாட்டில் எந்த நோக்கத்துக்காக இவ்வாறு செய்யப் பட்டது என்பது பற்றிய விசாரணைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

தற்போதைய ஆட்சியாளர்கள் மீது இந்த நாட்டு முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் நம்பிக்கை வைத்ததோடு, முஸ்லிம் சமூகத்தின் மீது சுமத்துப்படுகின்ற இந்த மிகப்பெரிய பழிக்கு சமூகம் காரணமல்ல ,இதற்குப் பின்னால் ஒரு பெரிய சதி இருந்தது என்பது இன்று ஒரு பேசுபொருளாக மாறியிருக்கின்றது. இவற்றிற்கு விடைகாண வேண்டியிருக்கின்றது.

கலாநிதி யூசுப் கர்ழாவி போன்ற இஸ்லாமிய அறிஞர்கள் கூறியதைப் போல ,வஸத்திய்யா -உம்மத்தன் வஸத்தன் என்ற நடுநிலையான சமுதாயம் என்பதற்கான உண்மையான கருதுகோள் என்ன என்பதை அடிப்படையாக வைத்து, அதனை தனியான துறையாக உருவாக்கி, எப்படி முஸ்லிம் சமூகம் நடுநிலையான ஒரு சமுதாயமாக இந்த உலகில் இருக்கின்றது என்பதை மெய்ப்பித்து ,உயிர்ப்பித்த உலமாக்களின் கருத்துக்களை உள்வாங்கி, இன்னும் ஆழமாக மாற்று சமூகத்தினர் மத்தியில் இந்த சமூகம் பற்றிய சரியான தெளிவை கொண்டு செல்கின்ற ஒரு முயற்சியில் இலங்கை வானொலி ஊடாக அஞ்சல் செய்யப்படுகின்ற குத்பாபேருரைகள் உட்பட நல்வழி காட்டுகின்ற நவீன யுகத்தில் நாங்கள் வாழ்கின்றோம் . எல்லாம்வல்ல இறைவன் பேரருள் புரிவானாக. - என்றார்.

# வவுனியா பல்கலைக் கழகத்தில் தொழில் வாய்ப்பிற்கான பயிற்சி

இரட்ணம் பவுண்டேஷன் மற்றும் விசன்ஸ் குளோபல் எம்பவர்மென்ட் நிறுவனங்களால், வவுனியா பல்கலைக்கழகத்தில் தொழில் வழிகாட்டல் அலகின் ஒருங்கிணைப்புடன், ஐந்து நாட்கள் 'தொழில்வாய்ப்பிற்கான தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை' நடத்தப்பட்டது.

ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட இப்பயிற்சிப்பட்டறையில் வவுனியா பல்கலைக்கழகத்தின் வணிகக் கல்விப் பீடத்தைச் சார்ந்த சிங்கள, முஸ்லீம் மற்றும் தமிழ் மாணவர்கள் உள்ளடங்கலாக மொத்தம் 35 மாணவர்கள் பங்குபற்றி தலைமைத்துவம் மற்றும் தொழில்முறை திறன்கள் தொடர்பில் பங்கேற்றல் முறையில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இந்தப் பயிற்சி பல்கலைக்கழக மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்பிற்கு சிறந்த வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

பயிலுனர்கள் இப்பயிற்சியில் தங்களது வாண்மைத்துவத்தை மேம்படுத்துவது தொடர்பிலும், தொழில்ரீதியாக தயார்படுத்துவதிலும் ஊக்கமெடுத்து, தலைமைத்துவம் சார்ந்த துலங்கல்களை சிறப்பாக வெளிப்படுத்தியிருந்தார்கள். ஒவ்வொரு பயிலுனரும் தமது வாழ்வின் அர்த்தம் (இகிகாய்- ஜப்பானிய சொல்) பற்றி சிந்தித்து, சுயவிருத்தி திட்டம் ஒன்றை உருவாக்கியிருந்தார்கள்.

நீண்ட கால அடிப்படையில் தொடர் கண்காணிப்புடன் ஒரு வருட நிகழ்ச்சித்திட்டமாக செயற்படுத்தப்பட்டு, மாணவர்களை சிறந்த திறன் கொண்டவர்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட இந்தப் பயிற்சியில், பயிலுனர்கள் ஐந்து குழுக்களாக செயற்பட்டு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்ட செயல்திட்டங்களை உருவாக்கியுள்ளனர்.

தொழில் முயற்சியாண்மை, மரம் நடுதல், தொழில்நுட்பம் தொடர்பான விழிப்பூட்டல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற சமூக செயல் திட்டங்களை எதிர்வரும் ஒரு மாத காலப் பகுதியில்,

தொழில் வழிகாட்டல் அலகின் ஆலோசனையில் வெள;வேறு தளங்களில் அமுலாக்கம் செய்ய உள்ளனர்.

இவ்வாறு, இந்தப் பயிற்சியின் மூலம், சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வினையூக்கியாக பயிலுனர்கள் செயற்பட்டு, சிறந்த தலைவர்களாகவும், சமூகத்திற்குப் பயனுள்ள

நற்பிரஜைகளாகவும் தங்களை வெளிப்படுத்த உள்ளனர்.

பயிற்சி பட்டறையின் இறுதி நாளில் நடைபெற்ற சான்றிதழ் வழங்கும் வைபவத்தில், பல்கலைக்கழக உபவேந்தரும் சிரேஷ்ட பேராசிரியருமான அற்புதராஜாவின் கரங்களால் அனைத்து பயிலுனர்களும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பின்னூட்டலின்போது, முவின மாணவர்களும் உட்படுத்தப்பட்டு ஆங்கில மொழியில் இப்பயிற்சி வழங்கப்பட்டதை பயிலுனர்கள் பெரிதும் வரவேற்று பாராட்டினர்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதுவும் நடக்கலாம்

**தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பின் முதலாவது வரவு – செலவுத் திட்டம் 2025, சமூகத்தின் விளிம்புநிலை மக்களை ஆதரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான சமூக நலத் தொகுப்பை அறிமுகப்படுத்துகிறது, அதே நேரத்தில் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும். நலன்புரி செலவினங்களின் அதிகரிப்பு, மிகவும் பாராட்டத்தக்கது என்றாலும், நிதி நிலைத்தன்மை, பொருளாதார சார்பு மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கு (ஹுனிய்) இலங்கை வழங்கியிருக்கும் உறுதிமொழி என்பவற்றின் மீது தொடர்ந்தும் கவலைகளை எழுப்புகிறது.**

**வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் வீட்டுவசதி ஆகியவற்றுக்கு வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பரவியுள்ள நிலையில், போராடும் சமூகங்களுக்கு நிவாரணம் வழங்குவதை ஆளும்தரப்பு நோக்கமாகக் கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கதுதான். 'அஸ்வெசும' சமூக நலத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது, மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கு மாதத்திற்கு ரூ. 17,500, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ரூ. 10,000 மற்றும் முதியவர்கள் மற்றும் ஊனமுற்றோருக்கு ரூ. 5,000 வழங்குகிறது. கல்வியில், பள்ளிப் பொருட்களுக்கு ஒரு மாணவருக்கு ரூ. 6,000, மஹாபோலா மற்றும் பல்கலைக்கழக உதவித்தொகைகளுக்கு ரூ. 4,600 மில்லியன் மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராட பள்ளி உணவுத் திட்டங்களுக்கு ரூ. 32.1 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்தல் வாக்குறுதியைத் தொடர்ந்து, சுகாதாரப் பராமரிப்புக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க ரூ. 604 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் அத்தியாவசிய மருத்துவப் பொருட்களுக்கு ரூ. 185 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தாய்வழி ஊட்டச்சத்து திட்டங்களுக்கு ரூ. 7.5 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான திரிபோஷா ஊட்டச்சத்து துணைத் திட்டத்திற்கு ரூ. 5 பில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.**

**இவை எல்லாம் ஆளுத்தரப்பின் சில முக்கிய மக்கள் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் ஆகும். இது முந்தைய ஆண்டுகளைவிட நலன்புரிச் செலவினங்களில் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்திருப்பதைக் காட்டுகின்றது. இதில் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், மாணவர்கள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணமும் அடங்கும்.**

**'அஸ்வெசும' திட்டத்தில், குறைந்தவருமானம்மற்றும்மிகவும்ஏழ்மையான குடும்பங்களுக்கு அதிகரித்த நிதி உதவி; இலவச பாடப்புத்தகங்கள், சீருடை மானியங்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித்தொகை போன்ற குழந்தை நலன் மற்றும் கல்வி சலுகைகள்; சிறுநீரக நோயாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவுகள், கர்ப்பிணிப் பெண்களுக்கான மேம்பட்ட ஊட்டச்சத்து திட்டங்கள் மற்றும் கூடுதல் மனநல விழிப்புணர்வு திட்டங்கள் உள்ளிட்ட சுகாதார மற்றும் ஊட்டச்சத்து முயற்சிகள்; மற்றும் தோட்ட வீடுகள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நகர்ப்புற குறைந்த வருமான சமூகங்களுக்கான வீட்டுவசதி மற்றும் மீள்குடியேற்ற உதவி ஆகியவை அடங்கும்.**

**இதற்கும்மேலதிகமாக, நலன்புரிவிநியோகத்தைநவீனமயமாக்குவதற்கும் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்வதற்கும் ஆளும்தரப்பு டிஜிட்டல் மயமாக்கலிலும் முதலீடு செய்து வருகிறது. இந்த நடவடிக்கை பொது சேவைகளை நெறிப்படுத்தவும் ஊழல் மற்றும் முறைகேடு அபாயத்தைக் குறைக்கவும் உதவும். இருப்பினும், அதிகரித்த நலன்புரிச் சலுகைகளின் பொருளாதாரத் தாக்கம் குறித்த கவலைகளை ஆளும்தரப்பும் ஒப்புக்கொள்கிறது, ஆனால் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டுவதற்காக இந்த திட்டங்களை கவனமாக வடிவமைத்ததாக அது நியாயப்படுத்துகின்றது. 2000 ஆயிரம் மில்லியன் ––ரூபாய் பற்றாக்குறை உள்ள ஒரு வரவு செலவுத் திட்டத்தில் இந்தக் கவலையை ஒருபோதும் தவிர்க்க முடியாது.**

**நிதிப் பற்றாக்குறைகள் மற்றும் நீண்டகால சார்புநிலை பற்றிய கவலைகளைத் தணிக்க மூலோபாய முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இருப்பினும், இதுபோன்ற திட்டங்களுடன்கூட, இலங்கை அதன் நலன்புரித் திட்டங்களைத் தக்கவைக்கப் போதுமான வருவாயை ஈட்ட முடியுமா என்பதில் சவால் உள்ளது என்று சில பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். வருமானத்தை அதிகரிக்காவிட்டால் நலன்புரி நிவாரணத் திட்டங்கள் நீடிக்க முடியாததாகிவிடும். என்றும், சிலவற்றை முழுமையாக செயல்படுத்த முடியாமல் போகலாம் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.**

**'தற்போது, அரசின் வருவாய் இலக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (றூம்ஊண) 15.1% ஆகும், இது தோராயமாக ரூ. 5 டிரில்லியன் ஆகும். இருப்பினும், இந்தத் தொகையில், கடனுக்கான வட்டி செலுத்துதலுக்கு ரூ. 2.9 டிரில்லியன் தேவைப்படுகிறது மற்றும் மூலதனச் செலவினத்திற்காக ரூ. 1.3 டிரில்லியன் ஒதுக்கப்படுகிறது. இதனால் ரூ. 800 பில்லியன் மட்டுமே எஞ்சியுள்ளது, இது அனைத்து நலத்திட்டங்களுக்குமானது, எனில் நலத் திட்டங்கள் எவ்வளவு காலத்திற்கு நீடித்து நிலைக்கும் என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது' என்று இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் துணை ஆளுநர் கலாநிதி விஜேவர்தன எச்சரித்தார்.**

**இலங்கையின் புதிய நலத்திட்ட மாதிரியை பொருளாதார மாற்றத்திற்காக நிலைநிறுத்திப் பயன்படுத்த முடியுமா, அல்லது அது நாட்டின் பலவீனமான நிதி அமைப்பில் சுமையாக மாறும் அபாயம் உள்ளதா என்பது தேசிய மக்கள் சக்தியின் திறமையின் கைகளிலேயே உள்ளது.**

# மனச்சான்றின் வழி வாழ்வோம்

**பத்ரி**

'மனிதனின் துன்பத்துக்குக் காரணம், அவனது ஆசையே" என்றார் புத்தர். மனிதன் படிக்கும் திறன் பெற்றிருப்பதால் அறிவைப் பெறுகிறான். தன் அனுபவத்தால் பட்டறிவையும் பெறுகிறான். எனவே, அன்றாட நிகழ்வுகளில் எது நல்லது, எது கெட்டது என பிரித்தறியும் திறனையும் பெறுகிறான். ஆறறிவு பெற்ற அவனுக்கு மட்டுமே, அறவழியிலும், அறமற்றவழியிலும் வாழத் தெரியும். அவன் தன் படிப்பறிவாலும் பட்டறிவாலும் எதிர்காலத்தைப் பற்றிய கனவுகளை வளர்த்துக் கொள்கிறான். அதை நோக்கிப் பயணிக்கவும் செய்கிறான்.

'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்னும் சொல்லாடலும் நம்மிடையே வழக்கில் உள்ளது. மகாபாரதத்தில் பாண்டவர் நல்லவர்களாக விளங்கினர். அவரது சொல்லும் செயலும் ஒன்றாகவே இருந்தன. ஆனால், கௌரவர்கள் பொறாமை, வஞ்சம், சூழ்ச்சி ஆகியவற்றின் இருப்பிடமாக விளங்கினர். எண்ணம், சொல், செயலில் தீயவர்களாக இருந்தனர். அதனால்தான் நல்லவர்களாக இருந்த பாண்டவர்கள் பாரதப் போரில் வெற்றி பெற்றனர்.

நம் மனச்சான்று நல்லவை எல்லாம் அறம் என்பதையும், தீயவையெல்லாம் அறமற்றவை என்பதையும் பொதுவாக ஒப்புக்கொள்கிறது. ஆனால், நம் ஒவ்வொருவருக்கும் வாழ்வில் வெவ்வேறு அறம் சார்ந்த கோட்பாடுகள் இருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், நம் வாழ்வை சிக்கலில்லாமல் வாழ நமக்குப் பணம் தேவைப்படுகிறது. அதற்காக செய்யும் அறமற்ற செயல்களையும் நம் மனச்சான்று அறமுள்ள செயல்களாகவே பார்க்கிறது.

இதன் காரணமாகத்தான் சமூகத்தில் குற்றங்கள் பெருகி வருகின்றன. குற்றவாளிகளின் பணபலத்திற்கு சட்டத்தின் ஓட்டைகள் துணைபோகின்றன. நீதிமன்றங்கள் அறத்தின் பக்கம் இருந்தாலும், குற்றம் சுமத்தப்பட்டவர்தான் குற்றத்தைச் செய்தார் என்பதை நிரூபிப்பதற்குச் சாட்சிகள் தேவைப்படுகின்றன.

"நான் என் வாழ்வில் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்ததில்லை. என் மனமறிந்தவரை அறவழியில்தான் செயலாற்றுகின்றேன். எனினும் துன்பப்படுகிறேன்" என்று நம்மில் பலர் வருத்தப்படுவதுண்டு. இப்படி ஓர் எண்ணம் தோன்றினால் இதுதான் நாம் நமது செயலை சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய சரியான தருணம்.

சூதாடுதல் தவறு என்பது உலகுக்கே பொதுவான அறம். ஆனால் மகாபாரதத்தில் தருமரோ, கௌரவர் நட்புடன் அழைப்பதால் சூதாடலாமெனக் கொண்ட அறத்தின் காரணமாக, நாடு உட்பட அனைத்தையும் பணயம் வைத்து சூதாடித் தோற்கிறார். இதுபோல் துரியோதனனும் சகுனியும் கூட அவர்தம் அறமல்லாத செயலுக்கு ஆயிரம் நியாயமான காரணங்களைச் சொல்ல முன் வரலாம்.

நம்மில் பலர் துன்பப்படுவதற்குக் காரணம், நாம் பொதுவெளிகளிலும், குடும்பங்களிலும் நடைபெறும் அநியாயங்களுக்கு எதிராக சிறு எதிர்ப்பைக் கூட காட்டாமல், மௌனமாக வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூட இருக்கலாம்.

பொதுவாக, ஒவ்வொரு குற்றத்துக்குப் பின்னணியிலும் பல நியாயங்கள் சொல்லப்படுவதுண்டு. இதுவே நியாயம் எனக் கருதிப் பல அநியாயங்கள் நடப்பதுமுண்டு. இந்த இடத்தில் நேர்மையாகச் சிந்தித்தால், அறம் ஆளுக்கேற்றாற் போல் மாறுவது தவறே ஆகும். அறம் என்பதற்கு நம் அனைவரின் மனச்சான்றும் ஒரே வடிவத்தைக் கொடுப்பதுதான் சரி என்றே தோன்றுகிறது. நம் மனச்சான்று, தவறான ஒன்றை சரியானது என்று ஒரு போதும் சொல்லாது. திருடுவது தவறு என்பது திருடனுக்குத் தெரிகிறது. அதனால்தான் யாருக்கும் தெரியாமல் திருடுகிறான். காவல் துறையிடமிருந்து தப்பிக்க முயல்கிறான்.

மனச்சான்றின் வழியில் வாழ்ந்தால்தான் அறம் தழைக்கும். நம் வாழ்வு சிறக்கும். நல்லறத்தின் வாழ்வின் விளைவாக உலகில் நன்மைகள் மட்டுமே நிறையும்.

பிறருக்கு ஒரு சிறு தீங்கைக்கூட ஏற்படுத்தாத நம் நல்ல எண்ணம், சொல், செயல் மட்டுமே அறமாகும். அத்தகைய வலிமை வாய்ந்த அறத்தின் வழியில் நாம் வாழும்போது, நமக்கு நன்மையே ஏற்படும். ஆனால், நன்மை ஏற்பட தாமதமாகலாம். இதைப் பற்றி வருந்தக் கூடாது. நம் செயலில் எது அறம், எது அறமல்லாதது என அவ்வப்போது தற்சோதனை செய்து பார்ப்பது நல்லது. இது நாம் எங்கே நாம் தவறிழைத்தோம் என்பதை நமக்கு தெளிவாக உணர்த்தும்.

அறிந்தோ! அறியாமலோ தவறிழைத்தலை மனித சமுதாயம் இயல்பாகக் கொண்டிருக்கிறது. இதுதான் நடப்பியலும்கூட. இச்சூழலில் இத்தகைய அறக் கொள்கையோடு நாம் வாழ்வது சாத்தியமா என்ற கவலையும் தோன்றுகிறது. ஆனால் அறம் சார்ந்த வாழ்க்கையை மட்டுமே மனச்சான்றின் வழியில் வாழவேண்டும் என்பதை, நாம்தான் முடிவு செய்ய வேண்டும்.

தனக்கு ஏற்படுகிற துன்பத்துக்குத் தானே முதல் காரணம் என மனம் திறந்து ஒப்புக்கொள்ளும் அறம், சங்க கால தமிழனிடம் இருந்திருக்கிறது. அதனால்தான், 'தீதும் நன்றும் பிறர் தர வாரா'' என்னும் உண்மையை அப்போதே சங்கப்பாடல் நேர்மையாக எடுத்துரைக்கிறது.

நாம் அனைவரும் வாழ்வில் எப்போதும் இன்புற்றிருக்கவே விரும்புகிறோம். இன்பம் என்பது நாம் ஆற்றும் நற்செயலின் விளைவே ஆகும். நமது நற்செயல் நமது நற்சிந்தனையில் உருவாகிறது. ஆக அனைத்தும் நம்மிடத்தில்தான் உள்ளது. அதனால்தான் நமக்கு நடக்கும் நன்மைக்கு மட்டுமல்ல. தீமைக்கும் நாமே பொறுப்பானவர்களாகிறோம்.

எனவே, நல்வழியில் இருந்து நாம் என்றும் விலகாமலிருக்கஇ நம் செயலைச் சுய அறப்பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். இத்தெளிவைப் பெற்றவர் யாரையும் வியக்கவோ, இகழவோ மாட்டார்."தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்னும் கலியன் பூங்குன்றனார் வரிகளை எந்த நாளும் நம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ வேண்டியது நம் கடமையாகும். இதை உணர்ந்து நம் மனச்சான்றின் வழியில் நாம் அனைவரும் வாழ்வை நகர்த்துவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# 247 கிலோ கஞ்சா பொதிகளுடன் சிலாபத்தில் ஒருவர் கைதானார்

சிலாபத்தில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்றில் சுமார் 247 கிலோ எடை கொண்ட கஞ்சா பொதிகளுடன் சந்தேகநபர் ஒருவர் சிலாபம் பிராந்திய ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிலாபம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு சிலாபம் பிராந்திய ஊழல் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது மெரவல பாலத்துக்கருகில் சந்தேகத்திற்கிடமான கார் ஒன்றை நிறுத்தி சோதனையிட்ட போது காரின் பின் பகுதியில் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 114 கஞ்சா பொதிகள் அதிகாரிகளால் மீட்கப்பட்டுள்ளன.

சுமார் 247 கிலோ 946 கிராம் எடை கொண்ட கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

கைதான சந்தேகநபர் 36 வயதுடைய திம்பில்லே பகுதியை சேர்ந்தவர் ஆவார். குறித்த நபர் கஞ்சா பொதிகளை மெரவல பகுதியில் இருந்து முன்னேஸ்வரம் நோக்கி கொண்டு செல்லும் போதே இவ்வாறு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

மேலும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் மற்றும் சந்தேகநபர் தொடர்பில் சிலாபம் பொலிஸ் தலைமையகம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.



# இறுதி ஊர்வலத்தில் மோதிய வாகனம் பொலிஸில் சிக்கியது

யாழ்ப்பாணம் கோப்பாய் சந்தியில் இருந்து கைதடி நோக்கி செல்லும் வீதியில் கடந்த 21 ஆம் திகதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்ற வாகனம் ஒன்று நேற்று (புதன்கிழமை) கோப்பாய் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கைதடி - தச்சன்தோப்பு பகுதியில் குறித்த வாகனம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், பாலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி மரணச் சடங்கின் இறுதி ஊர்வலத்தில் ஈடுபட்டவர்களை இந்த வாகனம் மோதியதில் அறுவர் படுகாயமடைந்துள்ள நிலையில் அவர்களில் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வாகனத்தின் உரிமையாளர் பிரதேசத்தைவிட்டு தப்பிச்சென்று தலைமறைவாகியுள்ளார்.

மேலும், வாகனத்தின் உரிமையாளர் கொழும்பில் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.






காலைக்கதிர்
Kalaikkathir

# யூனானி தினம் திருகோணமலையில் நேற்று கோலாகலக் கொண்டாட்டம்

2025 ஆம் ஆண்டுக்கான யூனானி தினம் நேற்று (புதன்கிழமை) காலை 9 மணிக்கு திருகோணமலை யக்கப் பீச் ரிசோட்டில் நடைபெற்றது.

யூனானி மருத்துவத்தின் பாரம்பரிய சிறப்பையும், அதன் அறிவியல் அடிப்படையிலான பயன்பாடுகளையும் முன்னிறுத்தும் வகையில், யூனானி தினம் - 2025 திருகோணமலையில் நடைபெற்றது.


வைத்தியர்(டாக்டர்) அப்துல் வஹாப் முஹம்மது மாசாத் தலைமையின் கீழ் இடம்பெற்றது.

இந்தநிகழ்வின்பிரதமவிருந்தினராககிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்தலால் ரத்னசேகர, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், டாக்டர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

யூனானி மருத்துவத்தின் வளர்ச்சி, அதன் சமூகப் பயன்கள், மக்களின் நலனில் அதன் பங்களிப்பு குறித்து சிறப்புரைகளும் இடம் பெற்றன.

'யுனானி மூலம் இயற்கை சிகிச்சை மற்றும் நிலையான ஆரோக்கியம்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறும் இந்த நிகழ்வு, இயற்கை சிகிச்சை முறைகள் பற்றிய, விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, யூனானி மருத்துவத்தின் வளர்ச்சியும் அதன் புதிய கண்டுபிடிப்புகளின் முக்கியத்துவம் பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது.





யூனானி மருத்துவ முறைகள், அதன் பரிசோதனைகள் மற்றும் ஆரோக்கிய மேம்பாட்டுக்கான கலந்துரையாடல் நடைபெற்றது.

விசேட ஆராய்ச்சி கட்டுரைகளை சிறப்பு வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு, மருத்துவ ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்பித்தனர்.

இதன்போது மருத்துவபங்காளிகளுக்கான கௌரவிப்பும், யூனானி மருத்துவத்துறையில் சிறப்பாக பணி புரியும் மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கான பட்டமளிப்பு மற்றும் சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

யூனானி மருத்துவ முறையின் மருத்துவப் பயன்களைவிளக்கி, அதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் ஓர் உயர்ந்த இந்நிகழ்வு நடைபெற்றது.

# கூல்பார் உரிமையாளரிற்கு 30 ஆயிரம் ரூபா தண்டம்



நல்லூர்சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனையின் மேற்பார்வை பொது சுகாதாரபரிசோதகர்நிர்மலானந்தனின்ஆலோசனையிலும் வழிகாட்டலிலும், கூல்பார், உணவகங்கள், தேநீர்சாலை என்பன தொடர்ச்சியாக பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் திருநெல்வேலி பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் கடந்த 10.01.2025 ஆம் திகதி திருநெல்வேலி பகுதியில் கூல்பார்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.



இதன்போதுகூல்பார்ஒன்றில்திகதி காலாவதியான சோடாக்கள் மற்றும் குளிர்பானங்கள் விற்பனைக்காக வைத்திருந்தமை கண்டறியப்பட்டு, அவைபொதுசுகாதாரபரிசோதகரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கூல்பார் உரிமையாளரிற்கு எதிராக பொது சுகாதார பரிசோதகர் பா. சஞ்சீவனால் மேலதிக நீதிவான் நீதிமன்றில் 20.01.2025 தாக்கல் செய்யப்பட்ட வழக்கு செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. உரிமையாளரிற்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு, உரிமையாளரை குற்றவாளி என இனங்கண்ட நீதிவான் எஸ். லெனின்குமார் 30 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தார்.

# 'சுபீட்சமான எதிர்காலத்திற்கான கல்வி' விசேடமான விழிப்புணர்வு நடைபவனி

(றமீஸ்)

சுபீட்சமான எதிர்காலத்திற்கான கல்வி எனும் தொனிப் பொருளின் கீழ் அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழு ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த சாதனியன் விழிப்புணர்வு 'நடைபவனி-2025' புதன்கிழமை இடம்பெற்றது.

அதிபர் ஏ.எல்.பாயிஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வு அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு பிரதேசத்தில் ஆரம்பமானது.

அக்கரைப்பற்று-கல்முனை பிரதான பாதை மூலமாக பல நூற்றுக்கணக்கான பழைய மாணவர்கள் நெற்றிப் பட்டியினை அணிந்தவாறு இந்நடை பவனியை மேற்கொண்டு அட்டாளைச்சேனை பொதுவிளையாட்டு




மைதானத்தை சென்றடைந்தனர்.

இந்நடைபவனியின்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, திருகோணமலை மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி அல்-ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.எம்.சம்சுதீன் உள்ளிட்ட கல்வி நிருவாகசேவை அதிகாரிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், கல்வியியலாளர்கள், உயரதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், துறைசார் முக்கியஸ்தர்கள்,நலன்விரும்பிகள், பாடசாலைச் சமூகத்தினர், பழைய மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

நூற்றாண்டு விழா கடந்து செயற்பட்டு வரும் இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் கலந்து கொண்ட இந்நடைபவனிமூலம் தேகாரோக்கியத்தைக் கட்டியெழுப்புவதோடு, எதிர்கால சந்ததியினரின் ஆரோக்கியம் தொடர்பில் விஷேட விழிப்புணர்வினை ஏற்படுத்தி சுபீட்சமான எதிர்கால கல்வி விருத்தியினை ஏற்படுத்துவதற்கான விஷேட வேலைத் திட்டமாக இது அமைகின்றது என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டினர்.






# போலியான ஆவணங்களுடன் மணல் ஏற்றிச்சென்றவர் கைது

(சுபேசன்)

போலியான ஆவணத்துடன் சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்ற நபர் ஒருவர் திங்கட்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி சந்தேக நபர் கிளிநொச்சியில் இருந்து போலியான ஆவணத்துடன் யாழ் நோக்கி மணலை ஏற்றி வந்த நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் வழிமறித்து ஆவணங்களை சோதனை செய்த போது சந்தேக நபர் போலியான அனுமதிப் பத்திரத்தைக் கிழித்து எறிந்துள்ளார்.

இந்நிலையில் பொலிஸார் அவரை கைது செய்திருப்பதுடன் புவிச்சரிதவியல் பணியகத்தின் உதவியோடு மேற்படி ஆவணம் போலியானது எனவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான குழுவினரே மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# சமுர்த்தி ரன் விமன வீடமைப்பு திட்டம் பயனாளிகளுக்கு வீடுகள் கையளிப்பு

(பாறுக் ஷிஹான்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி ரண் விமன வீடமைப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகள் செவ்வாய்க்கிழமை பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டன.

பிரதேச செயலாளர் ரீ.ஜே.அதிசயராஜ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சமுர்த்தி தலமைப்பீட முகாமையாளர் வீ.சிறிநாதன், முகாமைத்துவப் பணிப்பாளர் ஏ.எல்.எம்.நஜீப் உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பெரியநீலாவணை2மற்றும்பாண்டிருப்பு 1ஏ ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள இரண்டு பயனாளிகளுக்கு இந்த வீடுகள் கையளிக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.







# மீளக்குடியேற்றபட்டோருக்கான வீட்டுச் சான்றிதழ்கள் வழங்கல்

(ஹஸ்பர்)



இந்தியாவிலிருந்துமீளத் திரும்பியவர்களுக்கான நிலைபேறான மீள்குடியேற்றத்திற்கும்மீள் ஒருங்கிணைவுக்குமான விரிவாக்கப்பட்டஆதரவுத் திட்டத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, பட்டினமும் சூழலும், மொறவெள ஆகிய பிரதேச செயலகப் பிரிவில் வாழும் குறித்த பயனாளிகளுக்கு வீட்டுச் சான்றிதழ்கள் மற்றும் காசோலைகள் வழங்கும் நிகழ்வானது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டப்ளியூ.ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

பிரித்தானிய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் நோர்வே அரசாங்கத்தின் நிதிப்பங்களிப்புடன் இவ்வீடுகள் முழுமையாக திருத்தம் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது குச்சவெளி பிரதேச செயலகத்திலிருந்து 17 பயனாளிகளுக்கும், பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்திலிருந்து 16 பயனாளிகளுக்கும், மொறவெள பிரதேச செயலகத்திலிருந்து 07 பயனாளிகளுக்கும்மொத்தமாக40 பயனாளிகளுக்கும் சான்றிதழ்கள் மற்றும் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.



அந்த வகையில் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு ரூபா 500,000 பெறுமதியில் வீடு பூரணப்படுத்தப்பட்டதற்காக நன்கொடை உரிமைச் சான்றிதழும், ரூபா 15,000 பெறுமதியான காசோலையும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் திட்ட நிபுணர், துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

# சுகாதாரமற்ற உணவகங்களுக்கு எதிராக 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவீடு

(பாறுக் ஷிஹான்)

நோன்பு காலத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனின் நெறிப்படுத்தலில் செவ்வாய்க்கிழமை திடீர் உணவுப் பரிசோதனை அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, நிந்தவூர், மருதமுனை, கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நெளசாத் தலைமையில் கல்முனை மாநகர் பகுதியில் திடீர் சோதனை நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு 5 உணவகங்களுக்கு எதிராக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி களுக்கு உணவின் தரம் பற்றி தகவல் வழங்கப்பட்டது.



மேலும்சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மதன் தலைமையிலான குழுவினரால் சம்மாந்துறை பிரதேசத்தில் திடீர் சோதனை நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டு 5 உணவகங்களுக்கு எதிராக சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு உணவின் தரம் பற்றி தகவல் வழங்கப்பட்டன. அத்துடன் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட சுகாதாரமற்ற 5 உணவகங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சம்மாந்துறை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 70,000 ரூபா தண்டப்பணம்அறவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.






# இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வு

(சுபேசன்)

யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியும் - செயற்பட்டு மகிழ்வோம்நிகழ்வும் வெள்ளிக்கிழமை பிற்பகல் பாடசாலைமைதானத்தில் இடம்பெற்றிருந்தன.

பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சுதர்சனும், சிறப்பு விருந்தினராக இடைக்குறிச்சி கிராம அலுவலர் செல்வி கீர்த்திகாவும்,

கௌரவ விருந்தினராக பழைய மாணவர் க.காண்டீபனும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அணிவகுப்பு,இடைவேளை நிகழ்வு,கயிறு இழுத்தல் உள்ளிட்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.





## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வென்றெடுக்கக்கூடிய வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான கலந்துரையாடல்கள் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரையும் உள்ளடக்கி முன்னெடுக்கப்படும் எனவும், நாட்டில் இடம்பெற்ற வன்முறைகள் குறித்து விசாரிப்பதற்கான ஆணை அந்தக் கட்டமைப்புக்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

அதேபோன்று உலகளாவிய ரீதியில் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கு எதிராகப் பிரயோகிக்கப்பட்டுவரும் ஒடுக்குமுறைகள் மற்றும் மீறல்கள் பற்றிய விபரங்களைஉள்ளடக்கியமனிதஉரிமைகள் பாதுகாவலர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் மேரி லோலரின் அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலைதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள மேரிலோலர், மோதலினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் மனிதஉரிமைகள்செயற்பாட்டாளர்கள்தொடர் வன்முறைகள் மற்றும் கண்காணிப்புக்கு உள்ளாகின்றனர் எனவும், தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்படுகின்றனர் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமாத்திரமன்றி பல பெண் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என முத்திரை குத்தப்பட்டிருக்கின்றனர்என்றுதெரிவித்துள்ள அவர், அவர்கள் அமைதியான முறையில் போராட்டங்களை முன்னெடுக்கும்போது தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் எனவும், சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர் எனவும் விசனம் வெளியிட்டுள்ளார்.

## உள்ளாட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமையாக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

அரசமைப்பினால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்குமைய தேர்தலுக்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வாக்கெடுப்புடன் தொடர்புடைய இதர அரச நிறுவனங்களுடன்பேச்சுநடத்திவருகின்றோம்.

உள்ளுராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் திகதி மற்றும் தேர்தல் வாக்கெடுப்பு தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுப்பதற்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடுகிறது. இறுதித் தீர்மானம் இன்று எடுக்கப்படும். அல்லது எதிர்வரும் வாரம் எடுக்கப்படும்.

எவ்வாறாயினும் 2025.07.02 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான சாத்தியம் காணப்படுகிறது. எதிர்வரும் மே மாதமளவில் தேர்தலுக்கான வாக்கெடுப்பு கோரப்படலாம்.அனைவருக்கும் சாதகமான வகையில்வாக்கெடுப்புதிகதிநிர்ணயிக்கப்படும் என்றார்.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவிலுள்ள முக்கிய தொழிலதிபர்களுடனான சந்திப்பிலும் முன்னாள் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார். ரணில் விக்கிரமசிங்க குறுகிய காலத்துக்குள் இந்தியாவுக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவாகும். எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அவர் நாடு திரும்புவார்.




காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



## அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு

# முருகபூபதி எழுதிய 'யாதுமாகி' மின்னூல் மெய்நிகரில் வெளியீடு

ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர் லெ. முருகபூபதி எழுதியிருக்கும் யாதுமாகி (02 ஆம் பாகம் ) மின்னூல் அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் மார்ச் மாதம் அமேசன் கிண்டிலில் வெளியாகிறது.

இதன் வெளியீட்டு அரங்கு மார்ச் மாதம் 15 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் இடம்பெறும்.

கடந்த 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யாதுமாகி -முதலாம் பாகத்தின் மின்னூலை வெளியிட்டிருக்கும் முருகபூபதி, இந்த ஆண்டு மீண்டும், அதன் இரண்டாம் பாகத்தை வெளியிடுகிறார்.




முதல் பாகத்தில் 28 பெண் ஆளுமைகள் இடம்பெற்றனர். குறிப்பிட்ட நூலை தற்போதும் அமேசன் கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்க முடியும்.

எதிர்வரும் மார்ச் மாதம் வெளியாகவிருக்கும் யாதுமாகி ( இரண்டாம்

பாகத்தில் )( அமரர்கள் ) யோகா பாலச்சந்திரன், மகேஸ்வரி சொக்கநாதர் , பாக்கியம்பூபாலசிங்கம், கமலி ஞானசுந்தரன், பராசக்தி சுந்தரலிங்கம் , கலாலக்ஷ்மி தேவராஜா,

சங்கீத கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் மற்றும்

புஸ்பராணி தங்கராஜா, கலையரசி சின்னையா, ஞானலக்ஷ்மி ஞானசேகரன், ஆனந்தராணி பாலேந்திரா, மெல்பன் மணி , யோகேஸ்வரி சிவப்பிரகாசம் , சந்திரகௌரி சிவபாலன், ரேணுகா தனஸ்கந்தா , சாந்தி சிவக்குமார் , விஜயலக்ஷ்மி

இராமச்சந்திரன் , நவஜோதி யோகரட்ணம், பூங்கோதை கலா ஸ்ரீரஞ்சன், கவிஞர் அனார், தேவகி கருணாகரன் , சூரியகுமாரி ஸ்ரீதரன் பஞ்சநாதன் , தேவகௌரி சுரேந்திரன் , சியாமளா யோகேஸ்வரன் , வசந்தி தயாபரன் , உஷா ஜவகார் ,

பத்மா இளங்கோவன், ராணி சீதரன் , சுபாஷினி சிகதரன் , சிவநேஸ் ரஞ்சிதா ஆகியோரின் கலை, இலக்கிய, கல்வி, சமூக தன்னார்வத் தொண்டுப்பணிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.


இந்நூல் கலை, இலக்கியவாதி ( அமரர் ) அருண். விஜயராணி அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாதுமாகி ( இரண்டாம் பாகத்தின் ) முகப்பு ஓவியத்தை மெல்பனிலிருந்து ஓவியர் கிறிஸ்டி நல்லரெத்தினம், மற்றும் அக்கினிக்குஞ்சு யாழ். பாஸ்கர் ஆகியோர்

வடிவமைத்துள்ளனர்.

சிறுகதை, நாவல், கட்டுரை, பயண இலக்கியம், சிறுவர் இலக்கியம், புனைவு சாராத பத்தி எழுத்துக்கள் , திறனாய்வு முதலான துறைகளில் எழுதிவந்திருக்கும் எழுத்தாளர்

முருகபூபதியின் மற்றும் ஒரு வரவுதான் யாதுமாகி ( இரண்டாம் பாகம் ) இலங்கையில்




பாரதி, வாழும் வரலாறு மல்லிகை ஜீவா, பாரதி தரிசனம், இதர நூல்களையும் அமேசன் கிண்டிலில் தரவிறக்கம் செய்து படிக்க முடியும்.



காலைக்கதிர் Kalaikkathir

# ஐஸ் போதைப் பொருளுடன் சாவலிகாவில் இருவர் கைது

(இல்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பாகியதுல் சாலிகா சந்தியில் ஐஸ் போதைப் பொருளுடன் திங்கட்கிழமை இரவு 10.00 மணியளவில் கல்முனை விசேட அதிரடிப் படையினர் இருவரை கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு சந்தேக நபர்களை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அட்டாளைச்சேனை 16 பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும், மருதமுனை 03 பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேக நபரொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடம் இருந்து 910 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும், மற்றவரிடம் இருந்து 780 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மீட்கப்பட்டிருந்ததுடன், சந்தேக நபர்கள் உள்ளிட்ட சான்றுப்பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக பெரியநீலாவணைபொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.ஜி.எஸ்.சமந்த டி சில்வாவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளைபதில்அதிகாரிபொலிஸ்அத்தியட்சகர்குணசிறியின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு வலய உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் சம்பத் ஆகியோரின் வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க மேற்பார்வையில் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மற்றும் கல்முனை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நற்பிட்டிமுனை ஹிஜா கல்லூரியில் மாணவர்களுக்குக் கௌரவிப்பு

(ஷினாஸ்)



நற்பிட்டிமுனை ஹிஜா கல்லூரி ஏற்பாடு செய்த ஓஎல் தின நிகழ்வும் மாணவர்களை பாராட்டி கௌரவிக்கின்ற விழாவும் ஹிஜா கல்லூரியின் நிறைவேற்று முகாமைத்துவ பணிப்பாளர் ஆசிரியர், டபிள்யூ. அய்யூப்கான் தலைமையில் நற்பிட்டிமுனை லாபிர் வித்தியாலய பிரதான மண்டபத்தில் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 2024, 2025 ஆகிய ஆண்டுகளில் கல்லூரியில் கல்வி கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் மற்றும் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். ஹிஜா கல்லூரியில் கல்வி கற்று வரும் இம்முறை ஓ.எல் பரீட்சைக்கு தயாராக உள்ள மாணவர்களுக்கும் இங்கு நினைவுச் சின்னம் வழங்கிய பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாணவர்களுடைய கலை, கலாசார நிகழ்வுகளுடன் இடம்பெற்ற இந்த ஓஎல் தின விழா நிகழ்வில் அருட் சகோதரர், சிறிஸ்ருராஜன் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் வி.தையூப் கலந்து கொண்டார். விசேட அதிதிகளாக நற்பிட்டிமுனை அஸ்ஹர் வித்தியாலயத்தின் உதவி அதிபர் ஏ. எம்.பரீட், லாபீர் வித்தியாலயத்தின் பிரதி அதிபர் திருமதி ஏஜி. தஸ்லிமா, அல் -அக்ஸா வித்தியாலயத்தின் உதவி அதிபர் திருமதி ஏ.ரேஹானா ஷியாம் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு நினைவுச் சின்னங்களை வழங்கி பாராட்டி கௌரவித்தார்கள்.

நிகழ்வின் இறுதியில் பிரதம அதிதி அவருடைய கரத்தினால் ஹிஜா கல்லூரியை சிறப்பாக வழி நடத்தி, மாணவர்களின் கற்றில் கற்பித்தல் செயற்பாட்டிற்கு நீண்ட காலமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்ற முகாமைத்துவ பணிப்பாளர் ஆசிரியரும் விஞ்ஞான பாட பிரபல ஆசிரியருமான ஐ. எம் சூபி ஆகியோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து கையளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள் நிகழ்வில் அதிதிகளாக கலந்து கொண்டவர்களே ஹிஜாக் கல்லூரி கௌரவத்துடன் பாராட்டி கௌரவித்தது.

நிகழ்வுகளை தொகுத்து வழங்கிய மக்பூல் ஹிஜா கல்லூரி நிர்வாகத்தினரால் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சியில் கடமையாற்றும்

# அதிபர், ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரி மனு கையளிப்பு



கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரி கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரன் அவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கம் சார்பில் மகஜர் ஒன்று திங்கட்கிழமை மாலை கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக அதிகரித்து வரும் வழிப்பறி கொள்ளைகள் மற்றும் அதிபர், ஆசிரியர்கள் மீதான தாக்குதல்களை கண்டித்தும் தங்களது பாதுகாப்புகளை உறுதிப்படுத்துமாறு கோரியே குறித்த மகஜர் கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்க பிரதிநிதிகள் திங்கட்கிழமை கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் அவர்களை சந்தித்து கலந்துரையாடியதுடன், தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.



அதாவது அண்மைய நாள்களில் தொடர்ச்சியாக அதிபர், ஆசிரியர்கள் தினமும் காலை வேளையில் பாடசாலைகளுக்கு சென்று மீள திரும்புகின்ற போது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இன்றி அவர்கள் தங்களுடைய மோட்டார் சைக்கிள் மற்றும் சொத்துக்கள் வழிபறிக் கொள்ளையர்களால் கொள்ளையிடப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன என கவலை வெளியிட்டனர்.

இவற்றை கண்டித்து உரிய பாதுகாப்பை பெற்று தருமாறு கோரி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் அவர்களை கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து கலந்துரையாடியதுடன் தங்களது கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட பதில் அரசாங்க அதிபர் குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு தரப்புடன் கலந்தாலோசித்துள்ளதாகவும், விரைவில் துறைசார்ந்த திணைக்கள அதிகாரிகளுடன் அதிபர் ஆசிரியர்களுக்கு இடையில் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார். 113





# மட்டக்களப்பில் தொழுநோய் பரவுதலை தடுக்கும் முகமாக விழிப்புணர்வு பேரணி

கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டத்தின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய் பரவுகின்ற வீதத்தை குறைக்கும் வகையில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சுகாதார அமைச்சால் கிழக்கு மாகாணத்தில் இதனைக் கட்டுப்படுத்த தொடர்ச்சியான வேலைத் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தொழுநோய் தொடர்பில் இலங்கையிலே இரண்டாவது இடத்தை மட்டக்களப்பு மாவட்டம் வகிக்கின்ற காரணத்தால் பொதுமக்களுக்கு இந்நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டங்கள் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.





தேசிய தொழுநோய் மாதத்தை முன்னிட்டு செவ்வாய்கிழமை மட்டக்களப்பு நகரில் மாபெரும் விழிப்புணர்வு பேரணி ஒன்று நடைபெற்றது. கல்லடி பாலத்தில் இருந்து ஆரம்பமான இந்த விழிப்புணர்வு பேரணி நகரின் பிரதான வீதிகளூடாக மட்டக்களப்பு நகரை சென்று பின்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை வந்தடைந்தது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலக பணிப்பாளர் வைத்தியர் சு.முரளீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விற்கு மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் என்.தனஞ்ஜயன் வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், தாதியர் பாடசாலை மாணவிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த விழிப்புணர்வு பேரணியில் தொழு நோயைத் தடுக்கும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் ஏந்திச் சென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# விபத்துக்குள்ளான இளைஞன்

மீனவர்களின் கருத்துக்களை உள்வாங்காது கெங்காதேவி துறைமுகத்தை, அதிகாரிகள் தன்னிச்சையாக அபிவிருத்தி செய்து வருவதால் அந்த கடற்பகுதியில் மீனவரின் படகு ஒன்று விபத்துக்குள்ளாகியதில் நபரொருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக செவ்வாய்க்கிழமை சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மீனவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

கடற்றொழில் அமைச்சின் மூலம் எமது கடற்றொழில்சங்கத்துக்கு8லட்சம்ரூபாஒதுக்கப் பட்டது. எட்டு லட்சம் ரூபா வேலைத்திட்டத் திற்கான வரைவை நாங்கள் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தோம். இருப்பினும் அவர்கள் எமது திட்டத்தை புறந்தள்ளிவிட்டு தமது எண்ணத்திற்கு ஏற்றாற்போல் அபிவிருத்தி பணிகளில் ஈடுபட்டனர்.

இதனால் ஆபத்து என்றும் நாங்கள் கூறினோம். ஆனால், கரையோர பாதுகாப்பு திணைக்கள பொறியியலாளர், எமது திட்டவரைபை புறந்தள்ளிவிட்டு பழிவாங்கும் நோக்குடன்தனதுவிருப்பப்படி அபிவிருத்தியில் ஈடுபட்டார்.

நாங்கள் கேள்வி கேட்டதன் காரணத்தால் அபிவிருத்தி பணிகளை 5 மீற்றர்கள் தூரம் குறைத்து செய்யுமாறும் வேலையை செய்பவர்களுக்கு கூறினார்.

இந்நிலையில் நேற்று காலை இருவர் படகு ஒன்றில் தொழிலுக்கு சென்றுவிட்டு திரும்பினர். இதன்போது அந்த அபிவிருத்தி செய்த இடத்தில் படகு மோதியதில் படகில் பயணித்த இருவரும் தூக்கி வீசப்பட்டனர்.

அதில்20வயது இளைஞன்படுகாயமடைந்த நிலையில் அவசர அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதற்கு பிறகும் உரிய அதிகாரிகள் எமது கருத்து கேட்காவிட்டால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும். எனவே, உரிய அதிகாரிகள் விரைவில் இதனை கருத்தில் எடுத்து எமக்கு உகந்த வேலைத்திட்டத்தை, எமது வரைபடத்தின்படி செய்துதர வேண்டும். - என்றனர்.

# சாவகச்சேரியில் அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளைக் கடத்திச் சென்ற நபர் கைது

(சுபேசன்)

உரிய அனுமதிப்பத்திரங்கள் இன்றி சட்டவிரோதமாக லொறி ஒன்றில் ஏற்றி வரப்பட்ட 18மாடுகளைதிங்கட்கிழமைஇரவு சாவகச்சேரிப்பொலிஸார்கைப்பற்றியதுடன், சந்தேகநபர்ஒருவரையும்கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மாடுகளை ஏற்றி வந்த லொறியை சாவகச்சேரி நகரில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வழிமறித்து சோதனையிட்ட போதே மாடுகள் கைப்பற்றப்பட்டன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞன் திருமலையில் கைது

சுங்கவரி செலுத்தாமல் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு சிகரட்டுகளுடன் இளைஞன் ஒருவன் திங்கட்கிழமை மாலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைத்த தகவலின் பேரில் திருகோணமலை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் திருகோணமலை பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய இளைஞன் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 340 வெளிநாட்டு சிகரட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# சம்மாந்துறையில் 5 உணவகங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது

(பாறுக் ஷிஹான்)

நோன்பு காலத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீனின் நெறிப்படுத்தலில் செவ்வாய்க்கிழமைபாரிய உணவுப் பரிசோதனை நடவடிக்கை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்டன.

குறித்த நடவடிக்கையின் போது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஜே. மதன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பங்கேற்றனர்.

இதன் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு பண்டங்கள் மற்றும் பொருள்களை சுகாதாரத்துக்கு முறைகேடான வகையில் தயாரித்து வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தக நிலையங்கள் உள்ளிட்டவைகள் சோதனை மேற்கொள்ளப்பட்டு பாவனைக்கு உதவாத பொருள்கள் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

பின்னர் குறித்த சோதனையில் இனங்காணப்பட்ட 5 உணவக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான விடயங்களை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2025இல் வெளியிடப்பெற்றது